# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/69 - 2016 අප්‍රේල් 01 වැනි සිකුරාදා - 2016.04.01

*1960/69 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டம்*

வடக்கு மாகாண மாகாண சபையினால் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

பேரவைச் செயலகம்,
ஏ9 வீதி,
கைதடி,
2016, மாச்சு 30.

க. தெய்வேந்திரம்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண மாகாண சபை.

**வடக்கு மாகாண மாகாண சபை**

வடக்கு மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கல்வி நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் இலக்கம் 1 இனுடைய விடயம் 3 மற்றும் பின் இணைப்பு III இல் குறிப்பிடப்பட்டிருப்பதன் பிரகாரம், செயற்பாடுகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் இலங்கையின் வட மாகாணத்தில் கல்வித் திணைக்களத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான நியதிச் சட்டம் இதுவாகும். காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்டவாறான கல்விக் கட்டளைச் சட்டத்துடன் (அத்தியாயம் 381) இந் நியதிச் சட்டம் ஒவ்வாததாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மகாணத்தின் மாகாண சபையால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாக:-

1. இந்த நியதிச்சட்டமானது, வட மாகாணத்தின் மாகாண சபையினுடைய 2015 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கல்வி நியதிச் சட்டம் என குறிப்பிடப்படும் என்பதோடு ஆளுநர் இதற்கு சம்மதம் அளிக்கும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

2. (i) இந்த நியதிச் சட்டத்தினுடைய நோக்கங்களுக்கென மாகாண கல்விப் பணிப்பாளர், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் காலத்துக்குக்காலம் நியமனம் செய்யப்படும் ஏனைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்ட மாகாண கல்வித் திணைக்களம் நிறுவப்படுதல் வேண்டும்; வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தை ஸ்தாபித்தல்.

(ii) இந்த நியதிச் சட்டம் அமுலுக்கு வருகின்ற திகதிக்கு உடன் முன்னதாக அமுலிலிருந்த மாகாண கல்வித் திணைக்களம் இந்நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகவும் அவ்வாறே தொடர்ந்திருக்கும் என்பதுடன் அத்திணைக்களத்தின் ஒவ்வொரு அலுவலரும் பணியாளரும் இந் நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டதாகவும் அவ்வாறே தொடர்ந்து பதவியிலிருந்ததாகவும் கருதப்படுதல் வேண்டும்.

3. (i) கல்வி அமைச்சரினுடைய பொதுவான பணிப்புரைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இந்நியதிச் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளை, பணிப்பாளர்களும் ஏனைய அலுவலர்களும் நிறைவேற்றுவதோடு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) இந்த நியதிச் சட்டத்தின் மற்றும் அவற்றின் கீழ் உருவாக்கப்படும் விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் பணிப்பாளர் தற்றுணிபை பயன்படுத்தி விடுக்கும் கட்டளை அல்லது தீர்மானத்தை, மேன்முறையீடு அல்லது வேறு வகையில் பேரில் தள்ளுபடி செய்ய, மாற்ற அல்லது திருத்தம் செய்து சீராக்கும் உரிமை சட்டபூர்வமாக அமைச்சருக்கு உண்டு. அமைச்சருடைய இந்த முடிவு இறுதியானதும் அறுதியானதுமாக இருக்கும்.

## பகுதி I

### வட மாகாண வலயக் கல்வி ஆலோசனை சபை மற்றும் பாடசாலை ஆலோசனை சபைகளை நிறுவுதல்

வலயக் கல்வி ஆலோசனை சபை.

4. (i) வலயங்களின் கல்வி தொடர்பான விடயங்கள் பற்றியும் அவை தொடர்பாக எழுகின்ற தேவைகள் பற்றியும் வலயப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கவென வலய ஆலோசனைச் சபைகளை அமைச்சர் அமைக்கலாம்.

(ii) ஒவ்வொரு வலய ஆலோசனை சபையும் பின்வருவோரை அங்கத்தவர்களாக கொண்டிருக்கும்:-

(அ) அந்தந்த வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ;

(ஆ) குறித்த கல்வி வலயத்தின் எல்லைக்குள் உள்ள உள்ளூராட்சி அதிகாரசபை ஒவ்வொன்றினாலும் நியமிக்கப்படும் தகுதியும் பொருத்தமும் கொண்ட ஒவ்வொரு பிரதிநிதி ;

(இ) வலயம் அமைந்திருக்கும் பகுதியில் வதியும் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) கல்வி வலயத்தினுள் அடங்கும் சுகாதார வைத்திய அதிகாரி ;

(உ) மாகாண கல்விப் பணிப்பாளரால் முன்மொழியப்படும், கல்வி வலயத்தினுள் அடங்கும் நான்கு வகையான பாடசாலைகளுள் கடமையாற்றும் நான்கு பாடசாலைகளின் அதிபர்கள் ;

(ஊ) வலயக் கல்விப் பணிப்பாளரினால் முன்மொழியப்படும், வலயத்தினுள் அடங்கும் ஐந்துக்கு மேற்படாத பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள்.

(iii) வலயத்தினுடைய கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி ஆலோசனை சபையின் தலைவராக செயல்படுவார் ;

(iv) ஆலோசனை சயையின் முதலாவது அமர்வின் போது ஆலோசனை சபையானது அதன் உறுப்பினர்களிலிருந்து ஒரு செயலாளரை தெரிவு செய்தல் வேண்டும் ;

(v) வலய ஆலோசனை சபையின் பரிசீலனைக்காக முன்வைக்கப்படும் கல்விசார் அனைத்து விடயங்களையும் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள், குறிக்கப்பட்ட விதத்தில் கூட்டப்படும் வலய ஆலோசனை சபைகள் ஆராய்ந்து தீர்வு காண வேண்டும் ;

(vi) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வலய ஆலோசனை சபைகளுக்கு எந்த நோக்கத்துக்காகவும் நிறைவேற்று, நிர்வாக கடமைகளோ அல்லது அதிகாரங்களோ வழங்கப்பட்டதாக கருதப்படமாட்டாது என்பதுடன், அந்தந்த ஆலோசனை சபைக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரால் முன்வைக்கப்படும் அந்தந்த வலயங்களினுடைய கல்வி அல்லது அதனால் எழும் கல்வித் தேவைகள் குறித்து ஆலோசனை அல்லது பரிந்துரை வழங்குதல்.

5. (i) மத்திய கல்வி அமைச்சினால் வரையறுக்கப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு அமைவாக மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை ஆலோசனை சபை இருக்க வேண்டும் ; *பாடசாலை ஆலோசனை சபை.*

(ii) பாடசாலை ஆலோசனை சபையின் செயற்பாடாக, பாடசாலையினுடைய செயற்பாடுகளை கட்டுப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி செய்தல், நிகழ்வுகளை நடத்துவித்தல் தொடர்பாக வலயக் கல்வி பணிப்பாளரால் முன்வைக்கப்படும் விடயங்கள் அல்லது ஆலோசனை வழங்குவது பொருத்தமானது என சபை கருதும் விடயங்கள் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்குவதாக அமைதல் வேண்டும் ;

(iii) பாடசாலை ஆலோசனைச் சபைகளுக்கு எந்த நோக்கத்துக்காகவெனினும், எந்த ஒரு நிர்வாக அல்லது நிறைவேற்று அதிகாரங்கள் அல்லது செயற்பாடுகள் வழங்கப்பட்டதாக கருதப்படக் கூடாது ;

(iv) பாடசாலை ஆலோசனைச் சபையானது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை அங்கத்தவர்களாக கொண்டிருத்தல் வேண்டும் ;

(v) பாடசாலை ஆலோசனைச் சபையின் தலைவராக பாடசாலையின் அதிபர் செயற்படுவார் ;

(vi) பாடசாலை ஆலோசனைச் சபையை உருவாக்கிய பின் இடம்பெறும் முதலாவது கூட்டத்தில் சபையின் உறுப்பினர்கள் தங்கள் செயற்குழுவைத் தெரிவு செய்தல் வேண்டும்.

*6.* எந்த ஒரு மாணவனுக்கும் அவனது அல்லது அவனது பெற்றோரில் எவரினதும் மதம், தேசிய இனம், இனம், சாதி, சமூக அந்தஸ்து, அறிவு, அங்கவீனம் அல்லது மொழி காரணமாக மாகாணத்தின் எந்த ஒரு பாடசாலையிலும் அனுமதி மறுக்கப்படக்கூடாது. *பொது நிபந்தனைகள்.*

7. (i) மாகாண அமைச்சினுடைய அதிகாரத்தின் கீழ்வரும் எந்தப் பாடசாலையிலும் அனுமதிக்கென பணம் எதுவும் அறவிடப்படக்கூடாது.

(ii) உப பிரிவுகளிலே என்ன கூறப்பட்டிருந்தாலும் எந்தப் பாடசாலையிலாவது விளையாட்டுக்கான உடற்பயிற்சி அல்லது கல்வி, பொழுதுபோக்கு அல்லது சுகாதார நோக்கங்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான செலவுகளை ஈடுசெய்வதற்கென மாணவர்களிடமிருந்து கட்டணம்/ கட்டணங்கள் அறவிடுவதற்கு அதிகாரம் வழங்கும் விதிகளை இந்த நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்க முடியும்.

*8.* ஒரு பாடசாலையின் கட்டடங்கள், ஆசிரியர் இருப்பிடங்கள், அலுவலகங்கள் அல்லது வளாகங்கள் அல்லது பாடசாலைத் தோட்டங்கள் அல்லது விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய அல்லது அவை தொடர்பான நோக்கங்களுக்கென அல்லது இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கென தேவைப்படும் எந்த ஒரு தனியார் காணியையும் தற்போது நடைமுறையில் இருக்கின்ற எழுத்து மூலம் வரையப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கையகப்படுத்தப்பட முடியும்.

*9.* அமைச்சர் அல்லது பணிப்பாளர் அல்லது அமைச்சு அல்லது திணைக்களத்தினுடைய மேற்பார்வை செய்யும் அலுவலர் அல்லது பொதுவாக அல்லது குறிப்பாக அமைச்சரினால் அல்லது பணிப்பாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவராவது எந்த ஒரு பாடசாலைக்குள்ளும் பிரவேசித்து, அங்கு இடம்பெறும் செயற்பாடுகள் அல்லது அங்குள்ள சொத்துக்களை மேற்பார்வை செய்வது சட்டபூர்வமானதாக இருக்கும்.

## பகுதி II

### விதிமுறைகளை உருவாக்குவதற்கு அமைச்சருக்குள்ள அதிகாரங்கள்

*10.* (i) இந்த நியதிச் சட்டங்கள் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துக்கென விதிகளை அமைச்சர் உருவாக்க முடியும். அவை ஒழுங்குவிதிக்கோவை என அறியப்படும். *விதிகளை ஆக்குவதில் அமைச்சருக்குரிய அதிகாரம்.*

(ii)குறிப்பாக பின்வரும் விடயங்கள் குறித்த விதிகளை அமைச்சர் உருவாக்கலாம்.

(அ) 1. மாகாணத்தில் இருக்கும் மாகாணப் பாடசாலைகளுக்கு, அதாவது குறிப்பிடப்பட்ட தேசிய பாடசாலைகளையும், ஆயுதப்படையினருக்கென ஸ்தாபிக்கப்பட்ட விசேட பாடசாலைகளையும் தவிர்த்து, தேவையான அபிவிருத்தித் திட்டங்களுக்கான வசதிகளை வழங்குதல்.

2. (அ) சகல முன்பள்ளிகளையும்,

(ஆ) மேலே (ii) அ, (i) இல் "குறிப்பிடப்பட்ட" என்ற பாடசாலைகளைத் தவிர்த்து ஏனைய சகல பாடசாலைகளையும் முகாமைத்துவம் செய்வதை மேற்பார்வையிடுதலும்,

3. கல்வியியற் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் டிப்ளோமா மற்றும் பட்டம் பெற்றவர்கள் மத்தியில் கற்பித்தலுக்குரிய தகைமைகள் உடையோரை கற்பிக்கும் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்து கொள்ளுதல்.

4. தேசிய கல்வி அமைச்சரினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கமைவாக 1 AB, மற்றும் 1 C தவிர்ந்த மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர்களை நியமித்தல்.

5. அனைத்துக் கல்வித்துறை ஆளணியினரதும், அதாவது ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோரது இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் இணைப்பில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தேசிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுண்டு, மாகாணப் பொதுச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு, வேலை நீக்கம் செய்யப்பட்டதற்கெதிராக, பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமையுண்டு.

6. மாகாண ரீதியான கல்வி அபிவிருத்தி திட்டத்தையும் வருடாந்த நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான திட்டத்தையும் தயார் செய்தல்.

7. வருடாந்த கல்வி அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

8. அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மற்றைய கல்வித்துறை ஆளணியினரின் செயல்திறன்களை மதிப்பீடு செய்தல்.

9. தேசியக் கல்வி நிலையத்தின் பூர்வாங்க அனுமதியுடன் சேவைக்கால பயிற்சிகளை நடாத்துதல்.

10. பரீட்சை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பரீட்சைகளை நடாத்துதல்.

11. முறைசாரா கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்,

12. முன்பள்ளிகளை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்,

13. ஆரம்பநிலை பாடத்திட்டத்திலும் இரண்டாம் நிலை கல்வித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களிலும் உள்ளூர் சார்ந்த மாற்றங்களைச் செய்வதற்கு தேசியக் கல்வி நிலையத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல்.

14. கல்விசார் கட்டடங்கள், நூலகங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தலும் பராமரித்தலும்.

15. கற்பித்தல் உதவிச்சாதனங்கள், கட்புல ரீதியான உதவிச் சாதனங்கள் ஒலி- ஒளி பொருட்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்து பகிர்தல்.

16. மத்திய அரசின் கல்வி அமைச்சினால் குறித்துரைக்கப்பட்டவை தவிர ஏனைய விஞ்ஞான உபகரணங்களைக் கொள்வனவு செய்து பகிர்தல்.

17. சுத்தமான குடிநீரை போதியளவு வழங்குதல்.

18. தேசிய அரசினுடைய கல்வி அமைச்சின் அங்கீகாரத்தின் பின், பாடசாலை பாடநூல்களை தயாரித்து பகிர்ந்தளித்தல்.

19. தேசிய நூலகங்கள் சேவைகள் சபையின் வழிகாட்டல்களுக்கு அமைவாக பாடசாலை நூலகங்களை ஒழுங்கமைத்து அபிவிருத்தி செய்தல்.

20. மாகாணத்தினுள்ளே இருக்கும் எந்த பிரதேச கல்வி அலுவலகத்தினதும் எல்லைகளை வரையறை செய்தல்.

21. இலவச உணவு சீருடைகள் மற்றும் இலவச நூல்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல் அடங்கலாக பிள்ளைகளின் மருத்துவப் பரிசோதனைகள் சிகிச்சைகள், சுகாதாரம் மற்றும் நலன் பேணுதல் ஆகியன.

22. தேசிய அமைச்சினுடைய கோட்பாடுகள் நியம வகைப்படுத்தலின் அடிப்படையில் மாகாணத்தில் பாடசாலைகளை அமைத்தல், தரப்படுத்தல், தரமுயர்த்தல், வகைப்படுத்தல் ஆகியன.

23. மாகாணத்தில் நிலவும் வயது வந்தோர் கல்வித்தேவை தொடர்பான திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

24. மாகாண வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல் மற்றும் கல்வி தேவைகளை முன்நிறுத்துவதை நோக்கில் கொண்டு மாகாண நிதி முகாமைத்துவத்தை உறுதி செய்தல்.

25. "அனுபந்தம் III கல்வி"யின் கீழ் குறித்த விதிமுறைகள் உருவாக்குவது அவசியமானது என அமைச்சர் கருதும் வேறு ஏதாவது முக்கிய விடயங்கள்.

(iii) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எந்த ஒரு விதியும் மாகாண சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதும் அமுலுக்குவரும்.

11. இந்நியதிச் சட்டத்தில் தமிழ் உரைக்கும் சிங்கள அல்லது ஆங்கில உரைக்கும் ஏதேனும் ஒவ்வாமை எற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழி ஒவ்வாமை.

12. இந்த நியதிச் சட்டத்தின் சூழமைவு வேறு விதமாக வேண்டி நின்றால் தவிர, பொருள் கோடல்.

"ஆளுநர்" என்பது, வடக்கு மாகாணத்தின் ஆளுநரைக் குறிக்கும்.

"மாகாண சபை" என்பது, வடக்கு மாகாண மாகாண சபையைக் குறிக்கும்.

"மாகாணம்" என்பது, வடக்கு மாகாணத்தைக் குறிக்கும்.

"அமைச்சர்" என்பது, வடக்கு மாகாண அமைச்சரவையில் கல்வி என்ற விடயத்துக்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சரைக் குறிக்கும்.

"பணிப்பாளர்" என்பது, வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளரைக் குறிக்கும்.

4-738

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.